# நூலகச் செய்தி

## இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை

மலர் 2. இதழ் 2 ஏப்ரல் - ஜூன் 1973

உள்ளுறை

~~சபைத்தலைவரின் அறிக்கைச் சுருக்கம் (1971-1972ம் ஆண்டுக்குரியது)~~

நூலகசேவையின் அபிவிருத்திக்காக 1.10.71 முதல் 31.12.72 வரை சபை வழங்கிய உதவிகள்.

இ.தே.நூ.சே.சபை நடவடிக்கைகளின் வளர்ச்சி (வரைப்படம்)

கண்டிப்பிரதேச நூலகசேவைகள் - முன்னோடித்திட்டம்

கலாநிதி எஸ்.ஆர். ரங்கநாதன் - பாராட்டுரை

எழுச்சிகாணும் இலங்கைக்கான பாடசாலை நூலகங்கள் - கலாநிதி எஸ்.ஆர். ரங்கநாதன்

நூலகப் பயிற்சி வகுப்புக்கள் - 1973

ஸ்ரீலங்காப் பல்கலைக்கழக நூலகங்கள் - திரு. எச்.ஏ.ஐ. குணத்திலக

இலங்கை நூலகங்களுக்கொரு வழிகாட்டி - இலக்கம் 1.

(....4)

இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை

72, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 4 (ஸ்ரீ லங்கா)
தொலைபேசி: தலைவர் -82242 காரியதரிசி -82243

தலைமைக் காரியாலயம்

- இ.தே.நூ.சே. சபை அலுவலகம்
- பாடசாலை, பொது, நூலகப் பிரிவு
- இலங்கைத் தேசிய நூற்பட்டியல் பிரிவு
- யுனெஸ்கோ சேமிப்பு நூலகமும், நூலகத் தொழிற்துறை நூலகமும்.
- யுனெஸ்கோ தேசீயத் தகவல் பரிமாற்ற நிலையம்

நூலகசபை

திரு. டபிள்யூ. எம். ஏ. வர்ணசூரிய - தலைவர் (இளைப்பாறிய பதில் கல்வி நெறியாளர் நாயகமும், கல்வித் திட்டமிடல் நெறியாளரும்)

திரு. டபிள்யூ. இ. வி. த. அல்விஸ் (உள்ளூராட்சி ஆணையாளர்)

திரு. டங்கன் டபிள்யூ த அல்விஸ் (கொழும்பு மாவட்ட அரசாங்கஅதிபர்)

திரு. ஜே. டபிள்யூ. சுபசிங்ஹ (அத்தவக்காத்து, முடிக்குரிய வழக்கறிஞர், இளைப்பாறிய உயர் நீதிமன்றப் பதிவாளர்)

கலாநிதி ஆர். ஏ. எச். வீரக்கோன் (நெறியாளர், இலங்கை விஞ்ஞானத் தொழிற்துறை ஆராய்ச்சி நிலையம்)

திரு. எம். எம். ஹறாவுதீன் (வர்த்தகர், சமூகசேவையாளர்)

திரு. எஸ். யூ. சோமசேகரம் (இளைப்பாறிய உதவிக் கல்வி நெறியாளர், சமூகசேவையாளர்)

திரு. யூ. டி. ஐ. சிறிசேன (பதில் கல்வி நெறியாளர் நாயகம்)

திரு. எச். ஏ. ஐ. குணத்திலக்க (நூலகர், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை வளாகம்)

திரு. கே. டி. சோமதாஸ - நெறியாளர், இ.தே.நூ.சே.சபை, சபைக் காரியதரிசி (முன்னைநாள் நூலகர், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை)

புதிய நியமனம்

தலைநெறியாளர் (நிர்வாகம்) திரு. ஜே. டி. ஏ. ஜயமன்ன (பொது நிர்வாக சேவையிலிருந்து தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ளார்.

## சபைத் தலைவரின் அறிக்கைச் சுருக்கம்

## 1971/72 ம் ஆண்டுக்குரியது

சபை கொழும்பு 3, செல்ஸ்கார்டன்ஸிலுள்ள தனது சொந்தத் தலைமைக் காரியாலயத்திலிருந்து தொடர்ந்து இயங்கி வருகின்றது. சபையின் முதலாவது கிளைக் காரியாலயம், 1972 ஜனவரியில் கண்டியில் திறந்துவைக்கப்பட்டது. இக்கிளைக்கு மே மாதம் முதலாம் திகதியிலிருந்து ஓர் உதவி நெறியாளர் நியமிக்கப்பட்டார். இவ்வாண்டின் ஆரம்பத்தில் கண்டி மாவட்டத்தில் விரிவான அடிப்படையில் கிராமிய நூலக சேவைகளின் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டதால் கண்டியில் கிளைக்காரியாலயமொன்றின் அவசியம் உணரப்பட்டது. இப்பிரதேசச் சேவைகளை, இக்கிளைக் காரியாலயம் சீரமைத்து நெறிப்படுத்தி, மேற்பார்வை செய்யும். இவற்றுள் முதன்மையானது கண்டி மாவட்ட முன்னோடித்திட்டமாகும். இருபத்திரண்டு பொது நூலகங்களையும் இருபத்தைந்து பாடசாலை நூலகங்களையும் உள்ளடக்கிய இத்திட்டத்தின் களம் 900 சதுர மைல்களைக் கொண்டது. பத்தொரு இலட்சம் மக்கள் இங்கு வாழ்கின்றனர்.

(2....)

திரு. ஆர். பாஸ்கரலிங்கம் அவர்கள் சபையின் அங்கத்துவத்திலிருந்து இராஜினாமாச் செய்வதையொட்டிக் காலியான இடத்திற்கு திரு. யூ.டி.ஐ.சிறிசேன அவர்கள் நியமனம் பெற்றார். சபையின் கூட்டங்கள் கிரமமாக மாதந்தோறும் நிகழ்ந்து வந்துள்ளன. இக்கூட்டங்களில் சபையின் செயற்திட்டக் கொள்கை, வருடாந்த வரவு செலவுத் திட்டம், மற்றும் நிதி சம்பந்தமான விடயங்கள் ஆகியன நிர்ணயிக்கப்பட்டன. இவ்வகையில், பாடசாலை நூலகங்கள், பொது நூலகங்கள், தேசிய நூலகம், நூலகக் கல்வி, நூற்தேர்வு ஆகியவற்றுக்கான குழுக்கள் சபைக்கு ஆலோசனை கூறி உதவியுள்ளன.

சபையின் முன்னோடித் திட்டத்திற்கும், ஏனைய நூலக அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பின்வரும் நிறுவனங்கள் உதவியளித்துள்ளன.

(அ) யுனெஸ்கோ 20,000 பவுன்களைச் சபையின் முன்னோடித் திட்டத்திற்காகவும், இரு சிரேஷ்ட அதிகாரிகளை வெளிநாட்டில் பயிற்றுவதற்காகவும் வழங்கியது.

(ஆ) கண்டிப் பிரதேசக் கிராமிய கழகம் 12 பொது நூலகக் கட்டிடங்களை நிறுவுவதற்காகத் தாராளமான நிதியுதவி செய்தது. இவற்றுள் 7 கட்டிடங்கள் முன்னோடித்திட்டத்திற்குட்பட்டனவாகும்.

(இ) உள்ளூராட்சிப் பகுதி ரூபா 5000/- முதல் ரூ. 10,000/- வரையிலான நிதி உதவியை நூலகக் கட்டிடங்களை திருத்துவதற்கும், தளவாடங்கள், நூல்கள் முதலியவற்றை வாங்குவதற்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உதவியது.

(3....)

இந்த நடவடிக்கைகளின் மூலமும், சபையின் நெறிப்படுத்தலின் பயனாகவும் நூலகத்துறையில் - சிறப்பாகப் பொது நூலகத் துறையில் கணிசமான வளர்ச்சி [illegible] ஏற்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றங்கள் தம் விருப்பத்திற்கேற்ப நிதி வசதி கிட்டிய போது மட்டுமே மேற்கொள்ளும் ஒரு பணியாகவிருந்த நூலக சேவை அந்த அவல நிலையிலிருந்து வெகுவாக மாற்றமடைந்து வருகின்றது. நூலக சேவையின் அத்தியாவசி

(....2)

யத் தன்மை உள்ளூராட்சி மன்றங்களின் கவனத்தைப் பெற்றுள்ளதோடு உள்ளூராட்சி அமைச்சும் நூலக சேவையைக் கட்டாயமானதொரு சேவையாக்குவதற்கான சட்ட அமைப்பை ஏற்படுத்தவும் முற்பட்டு வருகின்றது.

சபையின் நிதி:

1971ம் ஆண்டு ஜனவரி மாதம் சபையின் நிதிக் கையிருப்பு ரூபா 345,640/- ஆகவிருந்தது. இதில் ரூ.1,00,000/-தேசிய நூலகத்தின் ஆரம்பச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டது. 1971/72ம் ஆண்டிற்கு அரசாங்க மான்யமாக ரூபா. 328,000/- கிட்டியதோடு வெளி நிறுவனங்களிடமிருந்து ரூ. 40,922/- பெறுமதியுள்ள தளவாடங்களும், நூல்களும் கிடைத்தன. இவற்றுள் ரூ. 3930.73 பெறுமதியுள்ள நூலகத்துறைசார்ந்த 199 நூற்தொகையொன்று அடங்கும். இந் நூல்கள் இங்கிலாந்திலுள்ள வெளிநாட்டு அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் (Overseas Development Administration) நூல் அன்பளிப்புத் திட்டத்தின்கீழ் பெற்றவையாகும். இவ்வன்பளிப்பை நாம் பெறுவதற்கு பிரிட்டிஷ் கவுன்சில் வழியமைத்தது. யுனெஸ்கோ நிறுவனத்திலிருந்து எமது முன்னோடித்திட்டத்தின் கீழ் சபை பெற்ற தளபாடங்களின் பெறுமதி ரூ. 18,684.74 ஆகும்.

எந்தவொரு நாட்டிலும் நூலகசேவைகள் அவசியம் பணச்செலவினை ஏற்படுத்துவதொன்றேயாகும். ஏனெனில் இச்சேவைகள் பொது நிதியிலிருந்து சகல மக்களுக்கும் இலவசமாக வழங்கப்பட வேண்டியனவாகும். எனவே நூலகச் சபை, அரசாங்கம் இச்சேவைகளை வழங்குவதில் ஏற்படக்கூடிய செலவுப் பளுவைக் குறைக்குமுகமாக 1970ம் வருட 17ஆம் இலக்க நூலகச்சட்டத்தின் 16 (1)(பி) பிரிவின்கீழ் நிதி திரட்டும் வழிகளில் கவனஞ் செலுத்தி வந்துள்ளது.

உள்நாட்டு வருமானவரிச் சட்டம் (1963ம் ஆண்டின் 4வது சட்டம் 16 ஏ பிரிவு) நூலகச் சபையை ஓர் அங்கீகரிக்கப்பட்ட தரும நிதியாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இதனையொட்டி 1973ஆம் ஆண்டில் தேசிய நிதியொன்றைத் திரட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகையில் நிதியளிப்போருக்கு வரிச்சலுகை கொடுக்கப்படுகின்றது.

தேசிய லொத்தரி சபையின் இலாபத்திலிருந்து ஒரு பகுதியைச் சபைக்கெனப் பெறுவதற்கான எமது முயற்சிகள் பயனளிக்கவில்லை. லொத்தரிச் சீட்டுக்களின் விற்பனையைப் பெருக்குவதற்கு உதவி செய்ய லொத்தரிச் சபையிலிருந்து நிதிபெறும் நிறுவனங்கள் முன்வந்தபோதும் திறைசேரி இந்த ஏற்பாட்டிற்கு இசையவில்லை. இவ்வகையில் லொத்தரி சபையின் தலைவர் சாதகமான பதிலிறுத்திருந்தார்.

நூலகசபை வருமானவரியிலிருந்து விலக்கப்பட்டுள்ளது.

## இவ்வருடத்தில் நூலகச் சபை ஆற்றிய பணிகள்.

நூலகக் கல்வி:

பயிற்சி பெற்ற நூலகர்களின்றி நூலகச் சேவை அபிவிருத்தியடைய முடியாததலின் நூலகக் கல்விக்குச் சபை முக்கியத்துவமளித்துள்ளது. ஆரம்பத்தில் களனிட்ட பல்கலைக்கழகங்களில் நடைபெற்றுவந்த "டிப்ளோமா" வகுப்புக்களைத் தற்போதுள்ள

தொழில்நுட்பக் கல்லூரிகளில் ("பொலிடெக்னிக்") நடத்துமாறு சபை கல்வி அமைச்சிடம் வேண்டியுள்ளது. மற்றும் இலங்கைப் பல்கலைக்கழகத்தாரிடம் ஏதேனுமொரு வளாகத்தில் நூலகக் கல்விப் பகுதியொன்றைப் பட்டக்கல்வி நிலையிலும் பட்டக் கல்வியை அடுத்த நிலையிலும், ஏற்படுத்துமாறு ஊக்குவித்து அம்முயற்சியில் வெற்றியும் கண்டுள்ளது. மேலும் சபை தன்னளவிலும் தொடர்ந்து பொது நூலகர்களுக்கும், ஆசிரிய நூலகர்களுக்குமான குறுகியகால நூலகப் பயிற்சி வகுப்புக்களை நடத்தி வந்துள்ளது. அதே வேளையில் கல்வி அமைச்சில் ஒரு மத்திய நூலகப் பிரிவை ஏற்படுத்தி இச்சபையோடிணைந்து பாடசாலை நூலக அபிவிருத்திக்கான திட்டமிட்டுச் செயலாற்றுமாறு கல்வி அமைச்சைத் தூண்டி வந்துள்ளது.

## நூல்கசேவைகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள்:

இன்றைய உலகில் நூலகங்களின் பணியையும், அவற்றை அமைக்கும் முறைகளையும் ஆசிரியர்களும், மாணவர்களும், பொதுமக்களும் தெளிந்து இவ்வகையில் ஆர்வங்கொள்ளச் செய்யுமுகமாக பல கண்காட்சிகள் சபையினால் ஒழுங்குசெய்யப்பட்டன. இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சிலின் ஆதரவோடு கொழும்பிலும், வேறு சில பிரதான நகரங்களிலும் நூற்காட்சிகள் நடத்தப்பட்டன. இக்காட்சிகளுள் ஒன்றில் இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள பாடசாலைகளுக்கான நூல்களும் சஞ்சிகைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டன. மற்றொரு கண்காட்சியில் நூலகக் கலை சம்பந்தமான நூல்கள் இடம்பெற்றன. இந்நூற்காட்சிகளுக்கான நூல்களை இங்கிலாந்திலிருந்து தருவித்து உதவியமைக்காக சபை பிரிட்டிஷ் கவுன்சிலுக்குத் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

யுனெஸ்கோ சர்வதேச நூல் ஆண்டுக் கொண்டாட்டங்களில் சபை கலந்துகொண்டு "இலங்கை நூலகங்கள்" என்ற தலைப்பினலான கண்காட்சியொன்றை கொழும்புக் கலாபவனத்தில் ஐந்து நாட்களுக்கு நடத்தியது. இலங்கை நூல் வெளியீட்டாளர் சங்கம், பிரிட்டிஷ் கவுன்சில், அமெரிக்க நிலையம், தொழிலபிவிருத்திச் சபை, மத்திய வங்கி, இலங்கை விஞ்ஞானத் தொழில் ஆராய்ச்சி நிலையம், அரும்பொருட்சாலை, ஆகிய நிறுவனங்கள் இக்கண்காட்சியில் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வெளியிடப்பட்ட நூல்கள் இடம்பெறச் செய்தன. இக்கண்காட்சி பொது மக்களால் விரும்பித்தரிசிக்கப்பட்டது.

கல்விப் பகுதியினர் கண்டியில் நடத்திய சாகித்திய வாரம் (1972) தொடர்பாகச் சபையினால் ஒழுங்குசெய்யப்பட்ட பாடசாலை நூலகக் கண்காட்சி ஐந்து நாட்களுக்கு நடைபெற்றது. இக்காட்சியை 30,000 பேருக்கு மேற்பட்டோர் கண்டு களித்தனர். மாண்புமிகு கல்வி அமைச்சரும் கல்வி அமைச்சின் காரியதரிசியும் மற்றும் பெருந்தொகையான ஆசிரியர்களும் இக்கண்காட்சியைப் பொதுவாகப் புகழ்ந்தனர்.

## தேசிய அடிப்படையில் நூலக விபரங்கள் திரட்டும் பணி:

ஸ்ரீலங்கா, யுனெஸ்கோ தேசீய கமிஷனின் வேண்டுகோளின் பேரில் சபை இந்நிறுவனத்தினல் மேற்கொள்ளப்பட்ட நூலகப் புள்ளிவிபரங்களின் உலகளாவிய தேசிய மதிப்பீட்டில் (1971) பங்கெடுத்துக்கொண்டது. மூன்று ஆண்டுகளுக்கொருமுறை

(....4)

மேற்கொள்ளப்படும் இந்த மதிப்பீடு, தேசீய, விசேஷ, பொது, பாடசாலை, பல்கலைக் கழக நூலகங்கள் பற்றிய புள்ளி விபரங்களை உள்ளடக்கியதாகும். சபை தன்னிடம் போதிய ஆட்பலமில்லாத போதிலும் இந்தப் பணியை மேற்கொண்டு கணிசமான வெற்றி ஈட்டியது. இவ்வாறு திரட்டப்பட்ட விபரங்கள் யுனெஸ்கோவினால் தொகுத்துக் காலக் கிரமத்தில் வெளியிடப்படும்.

நூலகத் தொழிலபிவிருத்தி - ஒன்றிணைந்த நூலகர் சேவை:

அரசாங்கப் பகுதிகளில் பெருந்தொகையான நிதிச் செலவில் பலர் நூலகர்களாக அமர்த்தப்பட்டிருப்பதால் ஒன்றிணைந்த நூலகர் சேவையொன்றினை ஏற்படுத்தும்படி ஏற்கெனவே 1957ம் ஆண்டில் சம்பள முரண்பாடுகள் பற்றிய கமிஷன் அரசினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் பெருகிவந்துள்ள அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் பெருந்தொகையான விசேஷ நூலகங்களையும், ஆவண சேவைகளையும் தோற்றுவித்துள்ளன. இதன் விளைவாக ஒன்றிணைந்த நூலகர் சேவையொன்று அவசரத் தேவையாகியுள்ளது. திறைசேரியின், நிர்வாக அமைப்புமுறை பற்றிய பிரிவு(O & M Division ) இந்த ஆலோசனைகளை ஆய்ந்து 1961ம் ஆண்டில் அறிக்கையொன்றைத் தயாரித்தது. எனினும் பொது நிர்வாகப் பகுதியினர் 1971ம் ஆண்டில் விடுத்த 30ம் இலக்கச் சுற்றறிக்கையைத் தவிர இவ்வகையில் வேறு எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதற்குப்பிந்திய காலத்தில் நாட்டில் நூலகத்துறையில் ஏற்பட்டுள்ள துரிதமான மாற்றம் இச்சுற்றறிக்கை நூலகச்சேவையின் வளர்ச்சியைத் தூண்டுவதைவிடக் கட்டுப்படுத்தக் கூடியதாகவுள்ளது. எனவே இவ்விடயம்பற்றி அரசினரோடு தொடர்பு கொள்ளும்படி சபையை அரசாங்க நூலகர்களின் தொழிற்சங்கத்தினரும், உள்ளூராட்சி நூலகர்களும் கேட்டுக்கொண்டனர். சபையின் 14(ஜி)ச் சட்டப் பிரிவு இவ்வகையில் கருமமாற்ற இடமளித்துள்ளது. எனவே நூலகர் தொழிற் சங்கப் பிரதிநிதித்துவம் கொண்ட ஒரு விசேஷக் கமிட்டியைச் சபை நியமித்து தற்போதுள்ள நிலைமையை ஆராய்ந்து அரசினருக்குச் சமர்ப்பிப்பதற்கான திட்டமொன்றைத் தயாரிக்க ஏற்பாடு செய்தது. இவ்வாண்டின் இறுதியில் இவ்விடயம் பரிசீலனை நிலையிலிருந்தது.

நூலகப் பயிற்சி - யுனெஸ்கோ புலமைப் பரிசில்:

திருமதி. கே. எல். பண்டிதரத்ன அவர்களுக்கு 1.6.73 முதல் 6.8.73 வரை இங்கிலாந்தில் நூலக சேவைகள் பற்றிப் பயில யுனெஸ்கோவின் புலமைப்பரிசிலொன்று வழங்கப்பட்டது. இதேபோன்ற யுனெஸ்கோ உதவி திரு. எஸ். எம். கமால்தீன் அவர்களுக்கு ஆஸ்திரேலியாவில் 15.8.73 முதல் மூன்று மாதங்களுக்கு நூலகப் பயிற்சிபெற வழங்கப்பட்டது.

நூலகத்துறையில் சர்வதேச நிகழ்ச்சிகள்

பங்களூரில் உள்ள ஆவண ஆய்வுக்கும் பயிற்சிக்குமான நிலையத்தின் நெறியாளரினதும் இந்தியாவிலுள்ள ஐக்கிய அமெரிக்கத் தகவல் நிலையத்தினதும் அழைப்பின் பேரில் சபைத் தலைவரும் சபையின் அங்கத்தவர்களிலொருவரான திரு. எச். ஏ. ஐ. குணத்திலக்கா

(.....5)

அவர்களும் பங்களூரில் 1972 ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற "பொது நூலக அமைப்புக்கள்" பற்றிய கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டார்கள். இக்கருத்தரங்கில் எல்லா இந்திய மாநிலங்களினதும் பல சர்வதேச நிறுவனங்களினதும் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். இலங்கையில் ஒரு தேசிய நூலக சேவையினை ஏற்படுத்த அநுசரிக்கப்பட்டு வரும் முறை இந்தியாவில் கடைப்பிடிக்கப்படும் முறைகளின்றும் பெருமளவில் மாறுபட்டதாயிருப்பதனால் இலங்கையின் திட்டத்தில் பிரதிநிதிகள் மிகுந்த ஆர்வங் காட்டினார்கள்.

பிரிட்டிஷ் கவுன்சிலின் அழைப்பின் மீது சபையின் நெறியாளர் இங்கிலாந்திலுள்ள செஃபீல்டில் 1972 ஜூலை மாதம் நடைபெற்ற "அபிவிருத்தித் துறையில் நூலகங்கள்" என்ற கருத்தரங்கில் கலந்துகொண்டார்.

1972ம் ஆண்டு முதல் சபை சர்வதேச நூலகங்களின் சம்மேளனத்தில் அங்கத்துவப் பதிவு செய்துகொண்டுள்ளது. மற்றும் இங்கிலாந்தின் நூலக சங்கத்திலும் வெளிநாட்டு நிறுவன அங்கத்துவம் பெற்றுள்ளது.

1972ம் ஆண்டுமுதல் இலங்கையில் "யுனெஸ்கோ" வெளியீடுகளின் சேமிப்பு நூலகமாகச் சபை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், இலங்கையில் யுனெஸ்கோவின் தேசீயதகவல் பரிமாற்ற நிலையமாகவும் சபை நியமிக்கப்பட்டுள்ளது.

<u>முடிவுரை</u>:

நூலக சேவைகளில் தொடர்பாகப் பெருமளவில் முதலீடு செய்து வந்துள்ள மேற்கத்திய நாடுகள் அங்கு வாழும் மக்களுள் குறைந்த பட்சம் 40 சத விகிதத்தினரையேனும் நூலகம்பற்றிய ஆர்வமுள்ளவர்களாக்குவதற்கு ஒரு தலைமுறைக் காலமேனும் செல்லவேண்டுமென்பதைத் தந்தம் அனுபவத்தில் கண்டுள்ளன. கல்வித்துறைக்கான மொத்த முதலீட்டில், இன்னும் ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாகச் (1965ல் 0.8 சத விகிதமாயிருந்தது) செலவிடும் இலங்கைபோன்ற நாடுகளில் படித்த மக்களுள் 20 சதவிகிதத்தினரையேனும் நூலகவுணர்வு படைத்தவர்களாக்குவது இமாலயப் பிரயத்தனமேயாகும். கடந்த 50 ஆண்டுகளுக்குமேல் நூலகசேவை வழங்கிவந்துள்ளதும் இந்நாட்டின் தலைசிறந்த பொது நூலகமுமான கொழும்புப் பொது நூலகத்தில் நகரிலுள்ள 5½ லட்சம் மக்களுள் 29,388 பேர்கள் மட்டுமே 1968ம் ஆண்டில் வாசகர்களாகப் பதிவு செய்துகொண்டிருந்தார்கள். மற்றும் இந்நூலக வாசிகசாலையையும், உசாத்துணைப் பிரிவினையும் இவ்வாண்டில் உபயோகித்தவர்கள் முறையே 126,000 பேர்களும் 90,000 பேர்கள் மட்டுமேயாகும்.

சபைச் சட்ட 14ம் பிரிவில் கண்டுள்ள துறைகளில் சாதனைக்குச் சாத்தியமான இலக்குகளை அமைத்துக்கொள்வது அபிவிருத்திக்கான களத்திலிருந்தும், விரிவான நிர்வாக நடவடிக்கைகள் மூலமும் பெறும் தகவல்களிலேயே தங்கியுள்ளது.

1971/72ம் ஆண்டு, சுருங்கக் கூறின் ஒரு பரீட்சார்த்த காலமெனக் கொள்ளலாம். தனது அதிகாரிகளோடு, மேலும்பல பயிற்சி பெற்றவர்கள் களத்தில் கருமமாற்றியிருந்தால் சபையின் பணி கூடுதலான பயனளித்திருக்கக்கூடும். சபையின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு பயிற்சிபெற்றோரின் பற்றுக்குறை பெருந்தடையாயிருந்தது. இதனையொட்டியே சபை நூலகக் கல்வியையும், பயிற்சியையும் முன்னணியில் வைத்துக் கருமமாற்றி வருகிறது. போதிய அளவு பயிற்றப்பட்ட நூலகர்களின்றேல் நூல்களின் தொகைப் பெருக்கத்தினால் மாத்திரம் நூலகங்கள் தம் இலக்கை அடைந்துவிடமுடியாது.

நூலக சேவையின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட உதவி

01.10.71 - 31.12.72

| உதவியவகை | பாடசாலை நூலகங்கள் (கல்வி அமைச்சு) | | | பொது நூலகங்கள் (உள்ளூராட்சி நிறுவனங்களும் உள்ளூராட்சிச் சேவைப் பகுதியும்) | | | [illegible] | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | முன்னோடித் திட்டம் | ஏனைய நூலகங்கள் | மொத்தம் | முன்னோடித் திட்டம் | ஏனைய நூலகங்கள் | மொத்தம் | முன்னோடித் திட்டம் | ஏனைய நூலகங்கள். |
| நூல்கள் (அ) | 37,325.00 | — | 37,325.00 | 37,325.00 | 11,255.00 | 48,580.00 | 74,650.00 | 11,255.00 |
| உபகரணங்கள் | 3,000.00 | — | 3,000.00 | 3,000.00 | 155.00 | 3,155.00 | 6,000.00 | 155.00 |
| நூலகப் பயிற்சி (ஆ) | — | 2,961.00 | 2,961.00 | — | 1,233.00 | 1,233.00 | — | 4,194.00 |
| கண்காணிப்பு | 6,002.00 | — | 6,002.00 | 6,002.00 | 642.00 | 6,644.00 | 12,004.00 | 642.00 |
| விரிவாக்கவேலை | — | 966.00 | 966.00 | | 9,152.00 | 9,152.00 | — | 10,118.00 |
| மொத்தம் | 46,327.00 | 3,927.00 | 50,254.00 | 46,327.00 | 22,437.00 | 68,764.00 | 92,654.00 | 26,364.00 |


குறிப்புக்கள்: (அ) சபை கிரயத்துக்கு வாங்கிய நூல்களும், அன்பளிப்பாகப் பெற்ற நூல்களும் இதனுள் அடங்கும்.

(ஆ) நூலக உள்ளூராட்சிச் சேவைப் பட்டதாரிப் பயிற்சியாளர்களுக்கு, கொழும்பு 7, லொங்டன் பிளேஸிலுள்ள நிர்வாகக் கல்வி நிலையத்தில் அளிக்கப்பட்ட பயிற்சியும் இதனுள்ளடங்கும்.

(இ) பின்வரும் நிறுவனங்களுடன் கூட்டாகச் சபை நடத்திய கண்காட்சிகளும் இதனுள்ளடங்கும்: - (1) பிரிட்டிஷ் கவுன்சில், இலங்கை (2) பிரதேசக் கல்வி அலுவலகம், கண்டி (3) யுனெஸ்கோ தேசீய கமிஷன், இலங்கை (4) கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய மாநகரப் பொது நூலகங்கள், (5) உள்ளூராட்சிப் பகுதி.

இலங்கைத் தேசிய நூலகசேவைகள் சபை

1.5.70 முதல் 31.12.72 வரை சபையின் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தையும் 1973ம் ஆண்டிற்கான உத்தேசத் திட்டத்தையும் விளக்கும் வரைப்படம்.




அட்டவணை

(அ) சபையினதும் உத்தியோகத்தர்களினதும் சம்பளமும் பிற வேதனங்களும் (தலைப்பு 1)

(ஆ) நிர்வாகச்செலவு மீண்டுவரும் செலவு (தலைப்பு 2.)

(இ) நிர்வாகச்செலவு ஆக்கப்பொருட்செலவு (தலைப்பு 3)

(ஈ) வழங்கியசேவைகள் மீண்டுவருஞ் செலவு (தலைப்பு 4)

(உ) வழங்கியசேவைகள் ஆக்கப்பொருட்செலவு (தலைப்பு 5)

(ஊ) முற்பணக்கணக்கு (தலைப்பு6)

(ஏ) 13.05.71 சபையின் புனரமைப்புத் திகதி.

... 1973ம் வருட உத்தேசத் திட்டம்.

அளவுத்திட்டம்: 1" அங்குலம் ரூபா 30,038.23

(எ) 05.05.70 சபை நிறுவப்பட்டதிகதி.

## கண்டிப்பிரதேச நூலக சேவைகளின் முன்னோடித்திட்டம்

| பொது நூலக சேவைகள் | | | பாடசாலை நூலக சேவைகள் | | |
|---|---|---|---|---|---|
| நகரசபை | பட்டினசபை | கிராமசபை | கனிஷ்ட பாடசாலைகள் | சிரேஷ்ட பாடசாலைகள் | மத்திய பாடசாலைகள் |
| 1. வத்தேகம | *1. தெல்தெனியா | –1. திகன–கெங்கல்ல | *1. ஹெறமிட்டிகல தீராளந்த கனிஷ்ட | *1. பூஜாபிட்டிய ம.வி. | *1. வலல.ம.ம.வி |
| | *2. மாவனல்லை | *2. மெனிக்ஹின்ன | *2. நகவெல–கனிஷ்ட (ஆண்) | *2. உடுவர–முரு[illegible]முல ம.வி | *2. ஹேறவஹெறட்ட ம.ம.வி |
| | | *3. உறதரலியத்த | *3. கலகெதற கனிஷ்ட | 3. [illegible]றுவ. ம.வி | *3. விக்கிரமபாகு ம.ம.வி |
| | | –4. கெலிஓய | 4. தம்பற கனிஷ்ட | *4. உறலக்க–கீளப்[illegible]லெஸ்[illegible]. ம.வி | *4. பொறமறால்ல ம.ம.வி. |
| | | –5. கலஉறிட்டியாவ | | *5. ஊறிரா. ம.வி. | |
| | | *6. அம்பரலே–மெத மகநுவர | | *6. அத்தியாதரம. மவி | |
| | | *7. தம்புக்பிட்டிய | | *7. [illegible]மெதமகநுவர. ம.வி. | |
| | | –8. மறத்தக்கொட–பூஜாபிட்டிய | | ––8. வத்[illegible] ம.வி | |
| | | –9. உறலக்க–பலேவத்த | | ––9. [illegible]ஜீனோரி ம.வி. | |
| | | *10. குரியகொட | | *10. அட்[illegible]லெப்பை ம.வி | |
| | | 11. அம்பிட்டிய | | *11. மதீ[illegible]. ம.வி | |
| | | 12. போவெல | | *12. லாவிஜய[illegible]பே ம.வி. | |
| | | –13. கொஉவ | | ––13. [illegible] ம.வி | |
| | | –14. புட்டுகப்புவ | | *14. மக்குருக்கு[illegible]வா ம.வி. | |
| | | *15. தித்தபஜ்ஜல–வெரலகம | | | |
| | | *16. கிளிகத்தேஹென | | | |
| | | *17. தலாத்து ஓயா | | | |
| | | *18. பண்டாரப்பொல | | | |

* நூலக சபையினால் புனரமைக்கப்பட்டது

– கண்டிப்பிரதேசக் கிராமிய சபையினால் அளிக்கப்பட்ட நிதியைக் கொண்டு நூலகக் கட்டிடம் அமைக்கப்பட்டு நூலக சபையினால் புனரமைக்கப்பட்டது.

–– புனரமைப்பு வேலை தொடர்கிறது.

ஏனைய நூலகங்கள் 1974ம் கருத்திட்டத்தில் சேர்க்கப்படும்.

## கலாநிதி எஸ்.ஆர். ரங்கநாதன்

கலாநிதி ரங்கநாதனின் மறைவினால் இந்தியா மாத்திரமன்றி முழு உலகுமே, நூலகத்துறையிலொரு பெரும் தலைவரை, ஆசிரியரை, தத்துவஞானியை இழந்து விட்டது. உண்மையில் திரு. ரங்கநாதன் இந்தியாவில் நூலக இயக்கத்தின் தந்தை யாவார். சுமார் அரை நூற்றாண்டுக்குமேல் நூலகத்துறையில் அளப்பரிய பணி யாற்றிய கர்மவீரர் அவர். மாணக்கர்களாலும், நண்பர்களாலும் ராவ் சாஉறிப் என்று அன்போடு அழைக்கப்பட்ட அவர் சென்னையிலொரு கல்லூரிக் கணித ஆசிரிய ராகத் தமது வாழ்க்கையை ஆரம்பித்து 1924ம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது முழுநேர நூலகரானார். 1924-25ம் ஆண்டுகளில் இலண்டன் நூலகக் கல்லூரியில் அக்காலத்தில் தலைசிறந்த பல ஆசிரியர்களின் கீழ் நூலகக் கலையைப் பயின்றார். இவ்வாசிரியர்களைப் பிற்காலத்தில் அவர் மிகுந்த நன்றியறி தலோடு நினைவுகூறத்தவறியதில்லை. இவ்வாசிரியர்களுள் ஒருவர் பெர்விக் சேயர்ஸ் ஆகும்.

இங்கிலாந்தில் திரு. ரங்கநாதன் தங்கியிருந்த காலத்தில் அங்குள்ள பலவகை யான நூலகங்களையும் நுணுக்கமாக அவதானித்து வந்தார். அவர் இந்தியா திரும்புவதற்கு முன்னரே விஞ்ஞானக் கோட்பாடுகளின் மீதமைந்ததொரு நூல்வகுப்புத் திட்டத்தை உருவாக்க உறுதி கொண்டார். இதன் விளைவாகத் தோன்றியதுதான் அவரது "கோலன்" நூல் வகுப்பு முறையும், பின்னர் படைக்கப்பட்ட நூல்வகுப்புத் திட்டமும். (Prolegomana to Library classification ). அவரது "ஐந்து விதிகள்" நூலகவியலில் அவருக்கிருந்த நுட்பமான அறிவை புலப்படுத்துவ தாயும், நூலகவியலையும், நூலகச் சேவைகளையும் விஞ்ஞான ரீதியாக ஆய்ந்தறி வதற்குதவும் கொள்கை நிர்மாணத்தை வழங்குவதாயுமுள்ளது. இவ்விரு நூல்களும் நூலகத்துறை சார்ந்த இலக்கியத்தில் தலைசிறந்தனவாகும். அவரால் எழுதப்பட்டு இந்தியாவிலும், இங்கிலாந்திலும், ஐக்கிய அமெரிக்காவிலும் வெளியிடப்பட்ட சுமார் 60 நூல்களிலும் நூற்றுக்கணக்கான கட்டுரைகளிலும், அவர் நூலகவியலில் கையா ளாத துறை யொன்றில்லையெனலாம். நூலகங்களும், நூலகவியலும் முக்கியத்துவம் பெற்றுள்ள உலகநாடுகள் அனைத்திலும் அவரது கருத்துக்களும், கோட்பாடுகளும் மிகுந்த மதிப்பைப் பெற்றுள்ளன.

சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வுபெற்றுக்கொண்டபின், கலாநிதி ரங்கநாதன் சொற்ப காலம் பனாரஸ் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிவிட்டு 1947ல் தில்லிப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். தில்லிப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரிநிலை நூலகப் பயிற்சி வகுப்பை ஆரம்பிப்பதற்கு அவரே பிரதான காரணராயிருந்தார். மேலும் இங்கு இந்தியாவிலேயே முதன் முறையாக நூலகத் துறையில் ஆராய்ச்சி நடத்துவதற்கான வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டது.

1961ம் ஆண்டில் கலாநிதி ரங்கநாதன் பங்களூரில் ஆவண ஆராய்ச்சிக்கும் பயிற்சிக்குமான நிலையமொன்றை அமைத்து அங்கேயே தமது இறுதிக்காலம்வரை பணியாற்றி வந்தார். அவர் நூலகவியலுக்கும், நூலகங்களுக்கும் ஆற்றிய சேவை

(...10)

களைக் கௌரவிக்கும் முகமாக தில்லிப் பல்கலைக்கழகமும், பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகமும் அவருக்கு கௌரவக் கலாநிதிப் பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தன. இந்திய அரசு அவருக்கு "பத்மஸ்ரீ" பட்டத்தை வழங்கியதோடு அவரை நூலகவியலில் தேசிய ஆராய்ச்சிப் பேராசிரியராக ஏற்றும் கௌரவித்தது.

யோஜனா, வால்யூம் இல. 19
அக்டோபர் 15, 1972.

பி.பி. மங்களா
நூலகவியற் பகுதித் தலைவரும்
பேராசிரியரும்,
தில்லிப் பல்கலைக்கழகம்.

## எழுச்சிகாணும் இலங்கைக்கான பாடசாலை நூலகம்

கலாநிதி. எஸ். ஆர். ரங்கநாதன்
நூலகத்துறைப் பேராசிரியர், தில்லிப் பல்கலைக்கழகம்.

(இக்கட்டுரையில் காலஞ்சென்ற கலாநிதி எஸ். ஆர். ரங்கநாதன் அவர்கள் இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன் தாம் மேற்கொண்ட ஒரே இலங்கை விஜயத்தின்போது அக்காலகட்டத்திலிருந்த நிலையை அவதானித்துக் கூறியுள்ளவை இன்றுள்ள எமது நிலைக்கும் பொருந்துவதாகவுள்ளது. அவர் இங்கு தங்கியிருந்த இரண்டே வாரங்களில் இலங்கையின் நூலக நிலையைத் தமது வழக்கமான விமர்சனக் கண்ணோட்டத்தில் தெளிந்துள்ளார். நூலக அபிவிருத்தியைப் பற்றிய அவருடைய திட்டத்தில் எப்போதும் முதன்மையான இடம்பெற்ற பாடசாலை நூலகம் பற்றிய கருத்துக்களை இக்கட்டுரையில் வழங்கியுள்ளார்.)

பன்னெடுங்காலமாக ஒரு பாடசாலை நூலகமென்பது, சதா மூடிவைக்கப்பட்டு விசேஷ வைபவங்களின் போதுமட்டும் திறக்கப்படும் வெறும் சடங்குப் பொருளாகவே கருதப்பட்ட ஒரு புத்தக அலுமாரியாகவே இருந்து வந்துள்ளது. கற்பித்தலென்பது கூடப் பெரும்பாலும் ஒரு வழிப் பேச்சாகவேயிருந்து வந்தது. இது, மாணவர்கள், ஆசிரியர் சொல்வதையெல்லாம் செவிமடுப்பதோடு அமையுமொரு நிலையாகும். வகுப்பறையில் வழங்கும் பாட நூல்களைத்தவிர வேறு நூல்கள் மாணவரின் அன்றாடப்பள்ளி வாழ்க்கையில் இடம் பெறுவது அரிதாயிருந்து வந்தது. பாடசாலைகளுக்கு மிகுந்த அறிவாற்றல் வாய்ந்த பிள்ளைகளை மாத்திரம் அனுமதிக்கும்வரையில் இக்கல்விமுறை ஓரளவு வெற்றி கண்டதெனலாம். ஆனால் சுமார் ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் எமது சமூகக் கொள்கைகள் மாற்றமடைய ஆரம்பித்துக் காலப்போக்கில் கல்வி அனைவரதும் உரிமையென்று உணரப்பட்டது. அறிவேணியின் உச்சத்திலுள்ளவர்களுக்கு மாத்திரமன்றி ஆகக் கீழ் மட்டத்திலுள்ளவர்களுக்கும் கல்வி பெறும் வாய்ப்பு அளிக்கப்படவேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உண்மையில், ஒரு காலத்தில் சில பிள்ளைகள் கல்வி பயிலத் தகைமையற்றவர்களென்று ஒதுக்கப்பட்டதுமுண்டு. ஆனால் இப்போது மக்களாட்சிமுறை இத்தகைய ஒதுக்கீட்டுக் கொள்கைகளிலுள்ள அபாயத்தை எமக்கு உணர்த்தியுள்ளது. இன்று ஒரு வகுப்பில் தகைமைவாரியாக இறுதியில் நிற்கும் ஒரு பிள்ளைகூடத் தன்னளவிலான ஆளுமையை அபிவிருத்தி செய்ய உதவுவது பாடசாலையின் இன்றியமையாக் கடமையாகக் கொள்ளப்படுகிறது.

முற்காலத்தில் பாடசாலைகளில் ஒரு பிள்ளையின் தனிப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திப்பதில் அதிகம் அக்கறை எடுத்துக் கொள்ளப்படவில்லையெனினும் அப்பிள்ளை ஒரே பாடநூலின் துணைகொண்டேனும் தானாகவே கல்வியறிவைத் தேடி வந்தது. எனவே அக்காலை நாம் பின்பற்றி வந்த பயிற்சி முறைகளும், அதற்கான உபகரணங்களும் திருப்திகரமானவைதானென்ற மருட்சியை ஏற்படுத்திவிட்டன. ஆனால் காலக்கிரமத்தில் சமூகத்திலுள்ள பயிலும் வயதெய்திய பிள்ளைகளனைவரும் எமது பாடசாலைகளை முற்றுகையிட ஆரம்பித்ததுமே இந்த நிலை பெரும் தாக்கத்திற்குள்ளானது. எல்லாப் பிள்ளைகளும் ஒரே வேகத்தில் அறிவு வளர்ச்சி பெறுவதில்லை. ஆசிரியரின் வாய்மொழிப் போதனைகளை அவர்களெல்லாரும் ஒரே அளவில் கிரகிப்பதில்லை. எனவே சனநாயக நெறியையொட்டி எமது வகுப்பறைகளில் ஏற்பட்டுள்ள பல்வேறு தரத்துப் பிள்ளைகளின் [illegible]சம், எமது பாடசாலைகளை வெற்றிகரமாக நடத்துவதைக் கடினமாக்கியுள்ளது.

எமது பாடசாலைகள் இதுகாறும் பின்பற்றிவந்த கூட்டுப்பயிற்சி ( mass teaching ) முறையை விடுத்து தனித்துவ வழிகாட்டு முறையை (individual guidance) நாம் பின்பற்றவேண்டியவர்களாயுள்ளோம். பிள்ளைகளின் மனதில் பல்வேறுபட்ட தகவல்களை நிரப்ப முயல்வதை விடுத்து, அறிவேடுகளில் பதிவாகியுள்ள தகவல்களைக் காலத்துக்காலம் தங்களுடைய தேவைகளுக்கேற்றவாறு தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான ஆற்றலை அவர்களிடம் ஏற்படுத்த வேண்டியவர்களாயுள்ளோம். கல்வியின் நோக்கத்தில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்திற்கு ஏற்றவாறு எமது வகுப்பறைப் பயிற்சி முறைகளிலும் மாற்றம் காணுவது அவசியமாகின்றது.

பாடசாலை வகுப்பறைகளில் கடைப்பிடிக்கவேண்டிய புதிய முறை, பிள்ளைகளுடைய ஆய்வார்வத்தை தூண்டிவிட்டு அவர்கள் தாமாகவே விடயங்களைத் தேடித் தெளிவுபெற உதவுவதேயாகும். வகுப்பில் செலவிடப்படும் நேரத்தில் அவர்களுக்கு நானாவிதத் தகவல்களையும், தயாரிக்கப்பட்ட அறிவு தொகுப்புகளையும் வழங்காமல், அவற்றை அவர்கள் தேடவேண்டிய அவசியத்தை மட்டும் உணர்த்திவிட்டால் போதுமாகும். வகுப்பறை வேலை இந்த அளவில் முடிவுறவேண்டும். அதன் பின்னர் செய்யவேண்டிய வேலைக்கான களம் பாடசாலை நூலகமாகும். மேலும் அவ்வேலையைப் பிள்ளைகள் பெரும்பாலும் தாமாகவே செய்தல் வேண்டும். செயலற்றுப் போதனைகளை செவிமடுப்பதை விட்டுப் பிள்ளைகள் ஆர்வத்தோடு அறிவுத் தேட்டத்தில் முனைதல் வேண்டும். இதில் நூலகரின் பங்கு முக்கியமானதாயினும், அளவோடிருத்தல் வேண்டும். அதுவும் பின்னணியிலேயே அவர் செயற்படல் வேண்டும். அறிவுச் சாதனங்களின் மூலம் பிள்ளை தானாகவே கற்றுக்கொள்ளும் முயற்சியை நூலகர் அவதானித்தல் வேண்டும். மேலும் பிள்ளை தனது வீட்டிலும், வெளிப்புறத்திலும், தெருக்களிலும் தான் பெறும் அநுபவத்தை நூல்களிலிருந்து அறிந்தவற்றோடு இணைத்துக் காண்பதையும், அதன் மூலம் தனது பிரச்சனைகளைத் தெளிந்து அறிவைப் பெருக்கிக் கொள்வதையும்

(....12)

நூலகர் அவதானித்தல் நலம். பிள்ளைகள் தருணத்திற்கேற்ற நூல்களைத் தேடிக்கொள்வதற்கு நூலகர் உதவுதல் வேண்டும். ஒரு பிள்ளை தனது அறிவுத் தேட்ட முயற்சியில் சிக்கல்களை எதிர்நோக்கவோ, அல்லது அற்றுமைப்பல் தடைபடவோ நேருமிடத்து நூலகர் சாதுரியத்தோடு அப்பிள்ளையின் சிக்கலறுத்துச், சுமுகமான வழிகாட்டி அதன் தேவைக்குகந்த நூல்களை வழங்க வேண்டும்.

இப்பணியில் போதனாசிரியர்களின் உதவி இன்றியமையாததாகும். ஒவ்வொரு பிள்ளையும் தனது ஆற்றலுக்கேற்ற வகையில் வளர்ச்சி காண்பதற்குத் துணைபோகும் ஒரே நோக்கத்தோடு ஆசிரியர்கள் செயற்படவேண்டும். அத்தோடு பாடசாலை நூலகத்தில் பிள்ளைகளின் மனவளர்ச்சிப்படித் தரங்களுக்கேற்ற மொழியும், நடையும் கொண்ட, எல்லா அறிவுத் துறைகளையும் அளாவிய, நூல்கள் சேகரித்து வைக்கப்படவேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக எமது சுயமொழிகளிலே அத்தகைய சிறுவர் நூல்கள் அரிதாயுள்ளது. எமது கல்வி முறையில் மாற்றங்காளும் மனப்பான்மையில் போதிய வளர்ச்சி ஏற்படாமலிருப்பது ஒருபுறமிருக்கப் பொருத்தமான நூல்களின் கட்டுப்பாடுதான் எமது கல்வி முறைகளை நவீனப்படுத்துவதற்குத் தடையாகவிருக்கின்றது.

ஆங்கில மொழியில் தகுந்த சிறுவர் நூல்கள் ஏராளமாகவுள்ளன என்பதில் சந்தேகமில்லை. சிரேஷ்ட தரத்திலுள்ள பிள்ளைகளுக்காக இந் நூல்களைப் பாடசாலை நூலகத்தில் வைக்கலாம். ஆனால் எமது தேசீயக் கொள்கை எல்லாத் தரங்களிலுமே தாய்மொழி மூலம் போதனை நிகழ வேண்டுமென்பதாகும். இந்தக் கொள்கை ஏற்கெனவே அநுசரிக்கப்பட்டு வருகின்றது. எனவே புதிய முறைக் கல்வியும் அதற்குத் துணைபோகும் நூலகப் படிப்பும் எல்லா மட்டங்களிலும், சகல அறிவுத்துறைகளையும் அளாவிய நூல்கள் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் தோன்றினால் மட்டுமே சாத்தியமாகும். இக்காரியம் தனியொருவரால் அல்லது ஒரு தனிப் பாடசாலையால் சாதிக்கக்கூடியதன்று. இம்முயற்சி, தேசீய அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காகத் தேசிய ஆசிரிய சங்கங்களும், எழுத்தாற்றலும், ஓவியத்திறனும் வாய்ந்த ஏனையோரும் ஒன்றுபட்டுழைக்க முன்வரவேண்டும். அவர்கள் தமது முழுக்கவனத்தையும் எதிர் வரும் ஆண்டுகளில் நாம் மேலே குறிப்பிட்ட எல்லா வகையான நூல்களையும் தயாரித்து வெளியிடுவதில் செலுத்தவேண்டும். ஆரம்பத்தில் இந்நூல்களுட் சில தற்போதுள்ள ஆங்கில நூல்களின் மொழிபெயர்ப்புக்களாக அல்லது தழுவல்களாக அமையலாம். இதற்காக வெளிநாட்டு வெளியீட்டாளர்களிடமிருந்து சித்திர "பிளாக்" களை ( "BLOCKS " ) கூலிக்கு அல்லது இரவலாகப் பெறவும் கூடும்.

அண்மையில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம் உயர் தரமான சிறுவர் நூல்களைத் தமிழ் மொழியில் வெளியிட்டுள்ளது. இந்நூல்கள் ஆங்கில நூல்களின் தழுவல்களாக அமைந்துள்ளதோடு அந்நூல்களின் தயாரிப்பில் இங்கிலாந்தில் உபயோகிக்கப்பட்ட சித்திர "பிளாக்" களே இடம்பெற்றுள்ளன.

(....13)

இவ்விதமான நூல் வெளியீட்டு முயற்சி வெற்றி பெறுதற்கு ஆரம்பகாலத்தில் எல்லாப் பாடசாலைகளும் இந்நூல்களை வாங்குவதற்கு ஒப்புக்கொள்ளவேண்டும். இதைவிடப் பாடசாலைகள் தாம் அரசாங்கத்திலிருந்து பெறும் நூலக மான்யத்தில் ஒரு பகுதியை தமிழ், சிங்கள நூல்களாகவே பெறுவது நூல் வெளியீட்டின் வளர்ச்சிக்குக் கூடுதலான உதவியளிப்பதாயிருக்கும்.

பொதுவாக ஆசிய நாடுகளிலும், சிறப்பாக லெங்கையிலும் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சி நம்மனைவரையும் இந்த வகையிலான வெற்றிப்பாதையில் ஊக்குவிக்குமென்பதில் ஐயமில்லை. இதில் இலங்கை முன்னணியில் நின்று, பாடசாலைப் பயிற்சி முறைகளிலும், நூலக அலுவல்களிலும் மாற்றங்காண்பதில் வழிகாட்டக்கூடும். ஏனெனில் தென் ஆசியாவிலும், தெக்கிழக்காசியாவிலும் இலங்கையிலேயே படித்தவர்களின் எண்ணிக்கை ஆகக்கூடுதலாகவுள்ளது. இலங்கையிலுள்ள ஆசிரியர்களும், கல்வி அதிகாரிகளும், எழுத்தாளர்களும் இந்தப் பணியில் தங்களைத் தக்கவாறு ஈடுபடுத்திக்கொண்டு ஆசியாவிலுள்ள ஏனைய சகோதர நாடுகளுக்கு வழிகாட்டவேண்டுமென்பது எனது விழைவாகும்.

தற்போதைக்கும், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் நூல்கள் போதிய அளவு கிடைப்பதற்கும் இடைப்பட்ட காலத்தில் ஒவ்வொரு பாடசாலையிலும் " ஒட்டு நூல்கள் ( Scrap Books ) தயாரிப்பதன் மூலம் ஓரளவு பயன் பெறலாம். பள்ளிப்பிள்ளைகளே, இந் நூல்களைத் தயாரிப்பதில் உதவுவார்கள். இந்நூல்களை பாடசாலைகளுக்கிடையில் பரிமாறிக் கொள்ளவும் முடியும்.

## பாடசாலை நூலகர்

இன்று கற்றல் கற்பித்தல் ஆகியவற்றில் பாடசாலை நூலகம் நேரடித் தொடர்பு கொள்வதனால் பாடசாலை நூலகரின் நிலையிலும் மாற்றமேற்பட்டுள்ளது. பாடசாலைகளில் நிகழும் கல்வி முயற்சிகளை வெறுமனே அவதானிக்கும் ஒரு பார்வையாளரென்ற நிலையிலிருந்து அந்த முயற்சிகளில் தாமுமொருவராக நேரடித் தொடர்புறும் நிலைக்கு பாடசாலை நூலகர் மாறியுள்ளார்.

படிப்பறை மேற்பார்வையாளராகவும், நூற்பாதுகாப்பு அதிகாரியாகவுமே முற்காலத்தில் விளங்கிய பாடசாலை நூலகர் அறிவுத்தேட்ட முயற்சிகளில் பொறுப்பேற்பது அரிதாகவேயிருந்து வந்தது. தற்காலப் பாடசாலை நூலகரோ பயிற்சியாலும், தகைமையாலும், சேவையாலும், சார்புகளாலும் ஓர் ஆசிரியரே.

ஒரு பாடசாலை நூலகரின் பொறுப்பு அறிவேடுகளை ஒழுங்குபடுத்திப் பராமரிப்பதோடு அமையாது அதற்கப்பாலும் விரிவுடையதாகும். கல்வித் தேட்டத்தில் உச்ச நிலையை அடையும் நோக்கத்தோடு சக ஆசிரியர்களுடன் கூட்டாகத் திட்டமிடுவதும், மாணவர்களோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு கருமமாற்றுவதுமான பொறுப்புக்களும் அவரைச் சாரும். ஏனெனில் அறிவுத் தேட்டம் ஆசிரியர்கள், மாணவர்கள், நூலகர்கள் ஆகிய முத்திறத்தாருக்கும் பொதுவான இலட்சியமாயுள்ளது.

இன்றைய பாடசாலை நூலகர் கல்வித் திட்டத்திற்கு உயிரூட்டி அதனை இயக்க உதவும் ஓர் அரிய கருவியாகத் திகழ்கிறார்கள். — ரூத் ஆன் டேவிஸ் —

## நூலகப் பயிற்சி வகுப்புக்கள் - 1973

ஆசிரிய நூலகர்கள்:

| பயிற்சிக் காலம் | பயிற்சித்தளம் | பயிற்றப்பட்டோர் தொகை |
|---|---|---|
| 1. 19. 2.73-23. 2.73 | கொட்டாஞ்சேனை கனிஷ்டபாடசாலை நூலகம் - கொழும்பு | 35 |
| 2. 19. 2.73-23. 2.73 | மஉறாவித்தியாலய நூலகம் - கண்டி | 35 |
| 3. 5. 3.73- 9. 3.73 | கல்விப்பகுதி நூலகம் - கொழும்பு | 33 |
| 4. 19. 3.73-23. 3.73 | " " - கொழும்பு | 31 |
| 5. 28. 5.73- 1. 6.73 | " " - கொழும்பு | 31 |
| 6. 4. 6.73- 8. 6.73 | " " - கொழும்பு | 25 |
| 7. 9. 7.73-13. 7.73 | இ.தே.நூ.சேவைகள் சபையின் பிரதேசக் காரியாலயம் - கண்டி | 21 |

பொது நூலகர்கள்:

| பயிற்சிக் காலம் | பயிற்சித்தளம் | பயிற்றப்பட்டோர் தொகை |
|---|---|---|
| 1. 6.11.72-18.11.72 | இ.தே.நூ.சேவைகள் சபையின் பிரதேசக் காரியாலயம் - கண்டி* | 3 |
| 2. 2[illegible].11.72- 9.12.72 | " " " " - கண்டி* | 2 |
| 3. 5. 2.73-15. 2.73 | " " " " - கண்டி* | 3 |
| 4. 18. 6.73-30. 6.73 | " " " " - கண்டி* | 7 |
| 5. 23. 7.73-27. 7.73 | மாநகரசபை நூலகம் - காலி | 20 |
| 6. 15.10.73-27.10.73 | இ.தே.நூ.சேவைகள் சபையின் பிரதேசக் காரியாலயம் - கண்டி* | 12 |
| | மொத்தம் | 47 |

* தொழில்வழிப் பயிற்சி

## ஸ்ரீ லங்காப் பல்கலைக்கழக நூலகங்கள்

எச். ஏ. ஐ. குணத்திலக
( நூலகர், ஸ்ரீலங்காப் பல்கலைக்கழகம், பேராதனை வளாகம்)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இலண்டன் பல்கலைக்கழகம், வெளித் துறைப் பட்டப் பரீட்சைகளை நடத்த ஆரம்பித்ததோடு இலங்கையின் உயர் கல்வித் துறையில் விடிவேற்பட்டது. ஏற்கெனவே ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்று குரலெழுப்பப்பட்ட போதும், அதற்கான கிளர்ச்சி "பல்கலைக்கழக இயக்கம்" என்ற வகையில் உருப்பெற்றுப் பயனளித்தது, 1921ம் ஆண்டு ஜனவரித் திங்களிலேயாகும். அவ்வேளை, இலண்டன் பல்கலைக்கழகத்தோடு இணைந்ததொரு அரசாங்க நிறுவனமாக இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி ஆரம்பமாகியது.

இதனையொட்டியே இலங்கையின் முதலாவது பல்கலைக்கழக நூலகமும் கொழும்பில், தர்ஸ்டன் வீதியில் ஒரு தற்காலிகக் கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்நூலகத்தின் பொறுப்பாளராக ஒரு நூலகலிகிதர் நியமிக்கப்பட்டதோடு, வருடாந்த மான்யமாக ரூ. 750/- ஒதுக்கப்பட்டது. எனவே தற்போது கொழும்பிலும், பேராதனையிலுமுள்ள நூலகங்கள் இச்சிறிய நிலையிலிருந்துதான் வளர்ச்சியடைந்துள்ளன. ஐந்து ஆண்டுகளுக்குப்பின் முதலாவது பல்கலைக்கழக நூலகராக திரு. ஆர். எஸ். என்றைட் நியமிக்கப்பட்டபோது நூல்களுக்கான மான்யம் ரூ. 10,000/- ஆகக் கூடிவிட்டது. எனினும் 1942ம் ஆண்டுவரை நூலக வளர்ச்சி மந்த நிலையில்தானிருந்தது. இவ்வாண்டில் இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதோடு, நூலக வளர்ச்சியும், உபயோகமும் பெருகலாயிற்று.

1952ம் ஆண்டில் பல்கலைக்கழகம் பேராதனைக்கு மாறியதோடு, நூலகமும் நிலம் பெயர்ந்தது. எனினும் மருத்துவ நூலகமும் கிளை நூலகமொன்றும் கொழும்பில் தொடர்ந்து இயங்கிவந்தன. பேராதனையில் நூலக வளர்ச்சி பிரமிக்கத்தக்க வகையில் நிகழ்ந்தது. 1967ம் ஆண்டளவில் நூற்தொகை 300,000 ஆகப் பெருகிவிட்டது.

1967 அக்டோபர் முதலாம் திகதி கொழும்பிலிருந்த பல்கலைக்கழகப் போதனை பீடங்கள் பிறிதொரு தனிப் பல்கலைக்கழகமாகப் பரிணமித்தன. முதலில் கொழும்புப் பல்கலைக்கழகம் என வழங்கிய இப்பல்கலைக்கழகம் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு என்ற பெயரைப் பெற்றது. முன்னர் கிளை நூலகமாக இயங்கிய நூலகமும் பழைய இலங்கைப் பல்கலைக்கழகத்து மருத்துவ நூலகமும் ஒன்றிணைந்து புதிய பல்கலைக்கழகத்தின் நூலகமாக உருப்பெற்றன. இந்தமாற்றத்தின் விளைவாக சுமார் 75,000 நூல்கள் கைமாறின.

பேராதனைப் பல்கலைக்கழகம் நூற்சேமிப்புச் சட்டத்திற்குட்பட்டதாகும். 1952ம் ஆண்டுமுதல் இலங்கையில் பிரசுரிக்கப்படும் நூல்கள், பருவவெளியீடுகள், ஏனைப் பிரசுரங்கள் அனைத்தினதும் பிரதியொன்று இந்நூலகத்திற்கு வழங்கப்படவேண்டும். பேராதனை வளாகத்திலுள்ள நூலகத்தில் தற்போது 310,000 நூல்களுள்ளன.

வருடமொன்றிற்கு 10,000 நூல்கள் இந்நூற்தொகையோடு இணைக்கப்படுகின்றன. நூலக நிர்வாகத்தின் கீழ் மத்திய நூலகமொன்றும், பொறியியல், மருத்துவம், விஞ்ஞானம், விவசாயம், விலங்கியல் மருத்துவம் ஆகிய அறிவுப்பீடங்களுக்குரிய நூலகங்களும் இயங்கி வருகின்றன. எழில்மிக்கதொரு வளாகத்தின் கவர்ச்சி மிக்க காட்சியாயுள்ளது ஆறு மாடிகளைக் கொண்ட மத்திய நூலகக் கட்டிடமாகும். இங்கு 77 பேர் கடமையாற்றுகிறார்கள். வருடமொன்றிற்கு ரூ. 900,000/- நூலகத்திற்காகச் செலவிடப்படுகிறது. இலங்கையிலுள்ள அதிப்பெரிய நூலகம் இதுவேயாகும்.

ஏற்கெனவே குறிப்பிட்டது போல கொழும்பு வளாகத்திலுள்ள நூலகம் 1967, அக்டோபர் முதலாம் திகதியிலிருந்து சுயமாக இயங்க ஆரம்பித்தது. மருத்துவம், சட்டம் ஆகிய துறைகளிலும், சில விஞ்ஞானத் துறைகளிலும் இந்நூலகம் சிறப்புமிக்கதாகவுள்ளது. இப்போது நிகழ்ந்துவரும் வளர்ச்சியின் போக்கில் இந்நூலகம் தலைசிறந்ததொரு நூலகமாக நிலைபெறுவதிற் சந்தேகமில்லை. ரீட் அவெனியூவில் ஒரு மத்திய நூலகமும், கின்ஸி வீதியிலொரு மருத்துவ நூலகமுமே பல்கலைக்கழக நிர்வாகத்திற்குட்பட்ட நூலகப் பிரிவுகளாகும். கொழும்பு வளாக நூலகத்தின் இருப்பு 80,000 நூல்களாகும். வருடமொன்றிற்குச் சுமார் 6000 நூல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

மற்றும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின், வித்தியாலங்கார, வித்தியோதய, கட்டுப்பெத்த வளாகங்களின் நூலகங்கள் பற்றி இங்கு குறிப்பிட வேண்டும். வித்தியாலங்காரப் பல்கலைக்கழக நூலகம் 1959 ஜனவரியில் ஆரம்பமாகியது. அவ்வேளை 1875ம் ஆண்டில் நிறுவப்பட்ட வித்தியாலங்காரப் பிரிவேனை, பல்கலைக்கழகத் தகைமை பெற்றது. இங்கேயும், வித்தியோதயப் பல்கலைக்கழகத்திலும் கீழ்த்தேயக் கல்விக்கான நூல்களே சிறப்பாகச் சேகரிக்கப்பட்டிருந்தன, எனினும் கடந்த 13 ஆண்டுகளாக நவீன உயர்கல்விப் பீடத்திற்குரிய வகையில் இரு வளாகங்களிலும் நூலக வளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது.

இந்நூலகங்கள், நூலகவியலறிவும் பயிற்சியுமுள்ளவர்களால் நவீன செய்முறைகளின் படிக்குச் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. வித்தியாலங்காரப் பல்கலைக்கழகத்தின் நூல் இருப்பு 50,000 ஆகும். ஆண்டுதோறும் சுமார் ரூ. 300,000/- செலவிடப்படுகின்றது. இங்கு 34 பேர் கடமையாற்றுகின்றார்கள்.

வித்தியோதயப் பல்கலைக்கழகமும் 1959 ஜனவரி மாதத்தில்தான் ஆரம்பித்தது. 1873ம் ஆண்டில் நிறுவப்பட்ட வித்தியோதயப் பிரிவேனையே பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப் பட்டது. சொந்தக் கட்டிடத்தில் சுமார் 50,000 நூல்களை இருப்பில் கொண்டுள்ள இந்நூலகத்திற்கான வருடாந்த மான்யம் சுமார் 375,000/- ஆகும். நூலகத்தில் 38 பேர் கடமைபுரிகின்றார்கள்.

1972 பெப்பிரவரி மாதத்தில் பல்கலைக்கழக நிலையடைந்த கட்டுப்பெத்த வளாக நூலகம், முன்னர் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் நூலகமாக இருந்து வந்தது. தற்போது இப்பிரிவு பொறியியல், கட்டிடக்கலை ஆகிய போதனைப்பீடங்களுக்குரியதாகவுள்ளது.

இலங்கையின் நூலகப் பரப்பில் பல்கலைக்கழக நூலகங்களின் தொகுதி மிகவும் சக்தி வாய்ந்ததொரு அங்கமாகும். இந்நாட்டின் அறிவுத்துறை சிறப்புற்றோங்க இந்நூலகங்கள் ஆற்றும்பணி அளப்பரியதாகும். சுயமான சிந்தனை வளர்ச்சியும் ஆய்வுப் பெருக்கமும் இந்நூலகங்களின் பணியிலேயே தங்கியுள்ளன.

இலங்கை நூலகங்களுக்கொரு வழிகாட்டி – இலக்கம் 1.
( 1972ம் ஆண்டுக்குரியது )

அரசினர் பொறியியல் கூட்டுத்தாபன நூலகம், 120, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02. தொலைபேசி : 20211, நூலகர் : திருமதி. எச். வீரசேகர, இ. நூ. ச. முதற்பரீட்சை. சேவையாளர்கள்: 02. வருடாந்த மான்யம் : ரூ. 2,000/-. நிகழ்வருடச் சேர்க்கை : 50. நூற்தொகை: 2,000. வெளியீடுகள்: State Engineer

அரசகரும மொழிப்பகுதி நூலகம், 22 றீட் அவெனியு, கொழும்பு 02. தொலைபேசி: 91683. நூலகர் : திருமதி. எஸ். நோறதெனிய. சேவையாளர்கள்: 01. வருடாந்த மான்யம்: ரூ. 2,100/-. நூற்தொகை: 5,400. நிகழ்வருடச்சேர்க்கை: 200. வெளியீடுகள்: இல்லை.

அலியன்ஸ் பிரன்கேஸ் டி சிலோன் (Alliance Francaise de Ceylan ), 54, வார்ட்பிளேஸ், கொழும்பு 7. தொலைபேசி: 94612. நூலகர் : செல்வி: ஆர்: ஒண்டச்சி. சேவையாளர்கள்: 03. வருடாந்த மான்யம் ரூ. 1,200/-. நூற்தொகை: 10,000. நிகழ்வருடச் சேர்க்கை: 80. வெளியீடுகள் : இல்லை.

அரசினர் ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி நூலகம், பண்டாரநாயக்க புரம், ராஜகிரியா,. தொலைபேசி: 94308. நூலகர்: திரு. எம். சி. பொன்னம்பெருமா. இ. நூ. ச. இடைநிலைப் பரீட்சை. சேவையாளர்கள்: 05. வருடாந்த மான்யம்: 5,600/-. நூற்தொகை: 7,110. நிகழ்வருடச்சேர்க்கை: 110. வெளியீடுகள்: இல்லை.

அளவீட்டு-வரைப்படமாக்கும் பகுதி நூலகம் (Institute of Surveying and Mapping) தியத்தலாவ. தொலைபேசி 247, நூலகர்: திரு. எச். கொடெலவத்த. பி. ஏ. சேவையாளர்கள்: 1½. வருடாந்த மான்யம்: 1,000/-. நூற்தொகை: 2,221. நிகழ்வருடச்சேர்க்கை: 371. வெளியீடுகள்: இல்லை.

அட்டர்னி ஜெனரல் அலுவலக நூலகம், உறல்ஸ்டோர்ப், கொழும்பு 12. தொலைபேசி: 20781. இணைப்பு: 271. நூலகர்: செல்வி. ஐ. டி. இ. பர்ணந்து. பி. ஏ. சேவையாளர்கள்: 03. வருடாந்த மான்யம்: 11,200/-. நூற்தொகை: 15,000. நிகழ்வருடச்சேர்க்கை: 105. வெளியீடுகள்: இல்லை.

இலங்கை விமான சேவை ( Air Ceylon ) பொறியியற் பிரிவின் தொழில்நுட்ப நூலகம், பண்டாரநாயக்க சர்வதேச விமானத் தளம், கட்டுநாயக்க. தொலைபேசி: 0789-433. நூலகர்: டான் எஸ். நவரத்தினம். சேவையாளர்கள்: 01. வருடாந்த மான்யம்: 2,000/-. நூற்தொகை: 600. நிகழ்வருடச் சேர்க்கை: 15. வெளியீடுகள்: இல்லை.

இலங்கைத்தர நிர்ணய நூலகம் ( Bureau of Ceylon Standards Library ) 53, தர்மபாலமாவத்தை, கொழும்பு 3. தொலைபேசி: 26051. நூலகர்: செல்வி. எஸ். எம். பர்ணந்து, பி. எஸ்ஸி (இலங்கை) இ. நூ. ச. முதற் பரீட்சை. சேவையாளர்கள்: 04. வருடாந்த மான்யம்: ரூ. 40,000/-. நூற்தொகை: – நிகழ்வருடச் சேர்க்கை: 14,2777 (தர அளவைகள்). வெளியீடுகள்: கிடைக்கப்பெற்ற புதிய தர அளவைகளின் பட்டியல் (அக விநியோகத்திற்கு மட்டும்)

இலங்கை விமானப் படை நூலகம்: சர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்த, கொழும்பு 02. தொலைபேசி: 33184. நூலகர்: ஏ. கணபதிப்பிள்ளை. சேவையாளர்கள் 06. வருடாந்த மான்யம்: ரூ. 60,000/-. நூற்தொகை: 10,500. நிகழ்வருடச் சேர்க்கை: 500. வெளியீடுகள்: இல்லை.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நூலகம், ரொறிங்டன் சதுக்கம், கொழும்பு 7. தொலைபேசி: 92281. நூலகர்: எஸ். கனேசர். ஜீ. சி. ஈ. (உயர்பிரிவு) (லண்டன்), இ. நூ. ச. முதற்பரீட்சை. சேவையாளர்கள்: 04. வருடாந்த மான்யம்: ரூ. 15,000/-. நூற்தொகை: 10,000. நிகழ்வருடச் சேர்க்கை: 75. வெளியீடுகள்: இல்லை.

இலங்கை,விஞ்ஞான தொழிற்துறை ஆய்வுக் கழகம் ( CISIR ) தொழில்நுட்ப நூலகம். 363, பௌதாலோக மாவத்தை,கொழும்பு 7. தொலைபேசி:93807. நூலகர்: செல்வி.சி.எல்.நெத்தசிங்க.பி.எஸ்ஸி (இலங்கை) ஏ.எல்.ஏ., எம்.எஸ்ஸி.(நூலகவியல்) சேவையாளர்கள்: 07. வருடாந்தமான்யம்:ரூ. 110,593/-. நூற்தொகை: 19,227. நிகழ்வருடச் சேர்க்கை: 1072. வெளியீடுகள்:(1) Current Technical Literature (வருடம் மும்முறை) (2) Bibliographical series (காலத்துக்குக் காலம்)

இலங்கை உருக்குக் கூட்டுத்தாபன நூலகம், அத்துருகிரிய, ஒருவல. தொலைபேசி:29447. 0791/211-3. நூலகர்: திரு.என்.யூ.யாப்பா. பி.எஸ்ஸி (லண்டன்) இ.நூ.ச.இடைநிலைப் பரீட்சை. சேவையாளர்கள்: 02. வருடாந்த மான்யம்: ரூ. 8,000/-. நூற்தொகை:2,320. நிகழ்வருடச் சேர்க்கை: 320. வெளியீடுகள் (1) Index to periodical articles (இருமாதங்களுக்கொருமுறை வெளியிடப்படுவது)

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிலைய நூலகம்,டாட்டன் பீல்ட், அகலவத்தை. தொலைபேசி:26 (அகலவத்தை). நூலகர்: திரு. ஜே.ஏ.அமரவீர பி.எஸ்ஸி (வித்தியோதய). சேவையாளர்கள்: 05. வருடாந்தமான்யம்: ரூ. 35,000/-. நூற்தொகை: 8,100. நிகழ்வருடச்சேர்க்கை: 100-200. வெளியீடுகள்: இல்லை.

இலங்கை சமூகசேவாப் பாடசாலை நூலகம், 82, 5ம் ஒழுங்கை, கொழும்பு 3. தொலைபேசி: 2337. நூலகர்: செல்வி.பி.எச்.டி. சுவர்ணலதா ஜி.சி.ஈ.(உயர்தரம்) நூலகக் கல்வி டிப்ளோமா (ஜே.யு.சி). சேவையாளர்கள்:01. வருடாந்த மான்யம்:ரூ.4,150/-. நூற்தொகை: 4,500. நிகழ்வருடச்சேர்க்கை:500. வெளியீடுகள்: இல்லை.

~~இலங்கைப் பல்கலைக்கழகம்~~- கொழும்பு வளாக நூலகம், த.பெ.இல.163[illegible], கொழும்பு. தொலைபேசி: 86432. நூலகர்: திருமதி.வி. த சூசா, பி.ஏ. நூலகவியல் பட்டம்(இலண்டன்) ஏ.எல்.ஏ.. சேவையாளர்கள்:54. வருடாந்த மான்யம்:ரூ.375,000/-. நூற்தொகை: 81,000. நிகழ் வருடச் சேர்க்கை: 6,000. வெளியீடுகள்: List of New Accessions.

இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாக நூலகம், பல்கலைக்கழகப் பூங்கா,பேராதனை - தொலைபேசி: 240 (நூலக அலுவலகம்) 242(நூலகர்). நூலகர்: திரு.எச்.ஐ. குணத்திலக,பி.ஏ.(லண்டன்) நூலகவியற் பட்டம் (லண்டன்). சேவையாளர்கள்: 77. வருடாந்த மான்யம்:ரூ.435,000/-. நூற்தொகை: 309,000. நிகழ்வருடச் சேர்க்கை: 10,000. வெளியீடுகள்: (1) List of New Accessions (Monthly)(2) Library Hand Book(1972),(3) Classified List of Theses 1942-1971.

இலங்கைப் பல்கலைக்கழக வித்தியாலங்கார வளாக நூலகம் - களனியா. தொலைபேசி: 397, நூலகர்: திரு.ரி.ஜீ. பியதாசா,பி.ஏ.(இலங்கை) நூலகவியற் பட்டம்(லண்டன்) ஏ.எல்.ஏ.. சேவையாளர்கள்: 34. வருடாந்தமான்யம்: 146,000/-. நூற்தொகை: 50,000. நிகழ் வருடச் சேர்க்கை: 2,430. வெளியீடுகள்: இல்லை.

இலங்கைப் பல்கலைக்கழக வித்தியோதய வளாக நூலகம், நுகேகொடை. தொலைபேசி: 2695(நுகேகொடை). நூலகர்:திரு.டபிள்யூ.டி. தொருகும்பர,பி.ஏ.(விசேட)இலங்கை,பி.எல்.எஸ்(மக்கில்) எம்.எல்.எஸ்.,ஏ.எல்.ஏ-ஏ.. சேவையாளர்கள்: 38. வருடாந்த மான்யம்: ரூ.150,000/-. நூற்தொகை: 56,584. நிகழ்வருடச்சேர்க்கை: 964. வெளியீடுகள்: இல்லை.

உள்நாட்டு இறைவரிப்பகுதி நூலகம், 225 காலிவீதி, கொழும்பு.04., தொலைபேசி:84380. நூலகர்: திரு.எச்.சிறிசேன, சேவையாளர்கள்: 05. வருடாந்த மான்யம்: ரூ. 10,000/-. நூற்தொகை: 14,400. நிகழ்வருடச்சேர்க்கை: 250. வெளியீடுகள்: இல்லை.

**National Digitization Project**

*National Science Foundation*

Institute : National Library and Documentation Services Board

1. Place of Scanning : National Library and Documentation Services Board. Colombo 07
2. Date Scanned : 2017/11/01
3. Name of Digitizing Company : Sanje (Private) Ltd. No 435/16. Kottawa Rd. Hokandara North, Arangala. Hokandara
4. Scanning Officer

Name : N.D.R. Gamage

Signature : ...

Certification of Scanning

*I hereby certify that the scanning of this document was carried out under my supervision, according to the norms and standards of digital scanning accurately, also keeping with the originality of the original document to be accepted in a court of law.*

Certifying Officer

Designation : Library Documentation Officer

Name : Iromi Wijesundara

Signature : Irom

Date : 2017/11/01

*"This document/publication was digitized under National Digitization Project of the National Science Foundation, Sri Lanka"*

fi